**04.12.2023 OS.534/2019** வா.சா.1 – திருமதி. ஜானகி

2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :

**____________________எத்தனை இலக்க சொத்துக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதனுடைய சர்வே எண் தெரியாது. விஸ்தீரனம் தெரியாது. நான்கு மாலும் தெரியாது. நானும் 1ம் பிரதிவாதி உடன்பிறந்தவர்கள். பேச்சு வார்த்தை அதிகமாக இல்லை. தாவா சொத்துக்கள் எனது தாத்தா சின்னையா என்ற சின்ன முத்தைரயர் பூர்வீக சொத்துக்கள். எனது தாத்தா இறந்து விட்டார். எனது அப்பா பிறந்தவர்கள் ஆறுமுகம் வெள்ளையம்மாள். ஆறுமுகம் கணவர் பெயர் பொன்னுசாமி. ஆறுமுகத்தற்கும் பொன்னுச்சாமிக்கும் பிறந்த பிள்னைகள் வெள்ளைசாமி,ி ரகு, பாண்டி. வெள்ளையம்மாள் கணவர் பெயர் வடிவேலு. வெள்ளையம்மாள்க்கும் வடிவேலுக்கும் பிறந்த பிள்ளைகள் சுப்பிரமணி சண்முகம் தமிழ்செல்வி. தாவா சொத்துக்கள் அனைத்தும் பூர்வீக சொத்துக்கள். எனது தாத்தா இறந்து சுமார் 45 வருடங்கள். எனது அப்பாவும் அவருடைய சகோதரிகள் ஆறுமுகம் மற்றும் வெள்ளையம்மாள் சொத்துக்களை பிரித்து கெர்ளளவில்லை. அந்த வெள்ளையம்மாள் ஆறுமுகம் தாவா சொத்துக்களில் பங்கு உண்டு. வெள்ளையம்மாள் ஆகியோரின் அவர்களின் வாரிசுகளோ வழக்கில் சேர்க்கவில்லை. எனது அப்பா நான் 3 வயதாக இருக்கும் போது இறந்து விட்டார். எனது அப்பா இறக்கும் போது 2 முதல் 4 வாதிகளாகிய எங்களுக்கு திருமணமாகவில்லை. எங்களுக்கு எனது அண்ணன் 1ம் பிரதிவாதி திருமணம் செய்து வைக்கவில்லை. தாவா சொத்துக்களின் வருமானம் எங்களுக்கு திருமணம் செய்து வைத்தார் என்று சொன்னால் சரிதான் . பற்றாகுறை ஏற்பட்டதற்கு எனது அம்மாவின் நகைகளை விற்று திருமணம் செய்து வைத்தார். எனது அம்மாவிற்கு ஏ்வவளவு நகைகள் இருந்தது என்று தெரியாது. எனது தாயார் எவ்வளவு நகைகளை யாரிடம் எவ்வளவு ரூபாய்க்கு விற்றார் என்ற எனக்கு தெரியாது. எனது அக்கா இருவருக்கும் தலா 15 பவுன் எனக்கு 10 பவுன் நகையும் போட்டார்கள். எங்கள் 3 வருக்கும் எவ்வளவு ரூபாய்மதிப்புள்ள சீர்வரிசை செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. எனது**

அக்கா இருவருக்கும் சீர்வரிசை செய்து வைத்தார்கள். எங்கள் கல்யாணத்திற்கு 1ம் பிரதிவாதி வாங்கிய கடன்களை அடைப்பதற்காக தான் B சொத்துகளை 2ம் பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்தார் என்று சொன்னால் சரியல்ல.

எனது அம்மாவுக்கு எந்த நகையும் கிடையாது என்றும் அதை விற்று எங்கள் திருமணம் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு 2013 ம் ஆண்டு திருமணம். எனது அக்கா இருவருக்கும் எப்போது திருமணம் நடந்தது என்று தெரியாது. மூவருக்கும் திருமணமான காலத்தில் இருந்து எங்களது கணவர் வீட்டில் தான்இருக்கிறோம். நாங்கள் வசிக்கும் ஊருக்கும் தாவா சொத்துள்ள ஊருக்கும் சுமார் 10 கிலோமீட்டர் துாரம் இருக்கும். எனது அம்மர் 1ம் வாதி என்னோடு தான் இருக்கிறார். நானும் என்அண்ணனும் தாவா சொத்துக்களை பொதுவாக அனுபவம் செய்துவருவதை காட்டுவதற்கான ஆவணங்கள் இல்லை. எனது அப்பா இறந்த பிறகு தாவா சொத்துகளை எனது அண்ணன் தான் அனுபவித்து வருகிறார். எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பபட்ட பூர்வீக வீடு மற்றும் கொல்லை இடங்கள் வீட்டு மனை இடங்கள் உள்ளது. அவ்றறை எனது அண்ணன் தான் அனுபவித்து வருகிறார். அந்த வீட்டு இடம் கொல்லை இடம் மனை இடத்தில் எங்களுக்கும் பங்கு உள்ளது . அந்த சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை.

எனது அப்பா அவர் நல்ல மன நிலையில் இருக்கும் போது தாவா சொத்துக்ள எனது அண்ணன் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்படுத்தி 01.01.1980ம் ஆண்டு ஒரு உயில் சாசனம் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. பட்டா எனது அண்ணன் பெயருக்கு மாறியுள்ளது என்று சொன்னால் அதை பற்றி என்கசு தெரியாது. எனது அண்ணன் பெயரில் தான் பட்டா உள்ளது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களுக்கு நாங்கள் வரி கட்டவில்லை. உயிலின் படி எங்களுக்கு எனது அண்ணன் திருமணம் செய்து வைக்கவேண்டும் என்றும் எனத அம்மாவை வாழ்நாள் முழுவதும் பார்த்துகொள்ள வேண்டும் என்றும் எழுதி வைக்கப்பட்டடுள்ளது என்று சொன்னால் சரியல்ல. B செட்யூல் சொத்துக்களை 2ம் பிரதிவாதி 04.09.2006 ந்தேதி கிரையம் செய்து

கொடுத்துள்ளனர். என்னிடம் காட்டப்படும் பத்திரம் அதுதான் அதில் உள்ள எழுதிகொடுப்பவர் இடத்தில் உள்ள கையெழுத்து எனது அண்ணன் கையெழுத்து ஆகும். கிரைய பத்திதரம் அசல் பி.வா.ச ஆ 1. மேற்படி பத்திரம் எழுதி கொடுத்ததில் இருந்து 2ம் பிரதிவாதி தாவா டீ செட்யூல் சொத்துக்களை அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். எங்களுக்கு 2018 ஆம் ஆண்டு தான் தெரியும்.

கிரையம் வாங்கும் போது மேடு பள்ளமாக தரிசாக கிடந்தது என்று சொன்னால் சரியல்ல. அந்த மேடு பள்ளத்தை சரிபடுத்தி2 ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கிரைய பத்திரத்தில் படி B செட்யூல் சொத்துக்களுக்கு கருப்பாயி பெயரில் பட்டா வந்துள்ளது. எனது அப்பா இறந்த பிறகு தாவா சொத்துக்களை அவர் எழுதிவைத்த உயில் படி எங்களுக்கு தெரிய எங்களை நீக்கி அவர் மட்டும் தனியாக அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. வருகின்ற வருமானத்தை எல்லாம் எனது அண்ணன் தான் எடுத்து வருகிறார். தாவா சொத்துக்களை நாங்கள் எப்போதும் 1ம் பிரதிவாதயுடன் சேர்ந்து அனுபவிக்காததால் பிரிவு 37/2 ன் கீழ் செலுத்திய நீதிமன்ற கட்டணம் குறைபாடு உடையது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களில் எங்களுக்கு எவ்வித பாக உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நாங்களும் 1ம் பிரதிவாதியும் இதுவரை நேசமாக இருந்து வருகிறோம் என்றும் 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த விபரம் அப்போதே தெரியும் என்றும். 2018 ம் ஆண்டில் தான் தெரியவந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நாங்களும் எனது அண்ணனும் கூட்டு சேர்ந்து கொண்டு 2ம் பிரதிவாதியிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பொய்யாக வழக்கு போட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.